# சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

## இடர் முகாமைத்துவக் கால சுயகற்றல் செயலட்டை – 2021

## பாட இணைச் செயற்பாடு (தரம் - 05)

காலம்: 2021.05.31 – 2021.06.06

செயலட்டை இல - 05

தயாரிப்பு: C. ரூபி ஜசிந்தா
(ஆசிரியர் ஆலோசகர்)
தெஹியோவிற்ற வலயம்

- களிமண், காகிதக் கூழ் போன்றவற்றை பயன்படுத்தி அழகிய பாத்திரங்கள், உணவு பாத்திரங்கள் செய்க.

**<u>காகிதக் கூழில் பாத்திரங்கள் செய்யும் படிமுறை</u>**

1. பிளாஸ்திக் பீங்கானை எடுத்து அதனைத் தலை கீழாகப் புரட்டி வையுங்கள்
2. கடதாசித் துண்டுகளைக் கிழித்து நீர் கொண்ட பாத்திரத்தில் இடுக.
3. சிறிதளவு மாப்பசையைத் தயார் செய்து கொள்க.
4. ஆரம்பத்தில் நீரில் நனையவிட்ட கடதாசித் துண்டுகளை கோப்பைகளில் மீது இடுக. (பசை பூசப்படாத ஈரலிப்பான கடதாசித் துண்டுகள்)
5. கோப்பையில் இடப்பட்ட கடதாசித் துண்டுகள் மீது பசையைப் பூசுக.
6. மீண்டும் ஈரலிப்பான கடதாசித் துண்டுகளை அதன் மீது இடுக.
7. இவ்வாறு தடிப்பமான படையொன்று உருவாகும் வரை மீண்டும் மீண்டும் ஈரக் கடதாசியை ஒட்டிக் கொள்க.
8. ஒட்டும்போது சுருக்கங்கள் ஏற்படாதவாறு கையால் நன்கு தடவிக் கொள்க.
9. இறுதியில் ஒட்டும் கடதாசியை பல நிறங்கள் கொண்ட பெரிய துண்டுகளாக ஒட்டிக்கொள்க.
10. இவ்வாறு தயாரிக்கப்பட்ட தட்டத்தை உலர்த்தி (ஒரு நாளின் பின்னர்) கழற்றிக் கொள்க.
11. நீங்கள் விரும்பியவாறு நிறங்கள், கோலங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அலங்கரித்துக் கொள்க.